# நூறு பெண்கள் அரசியல் முன்னணியில்



## இளம் பெண்கள் ஜனநாயக அரசியலில் வலுவூட்டுவதற்கான மொடியூல்

# நூறு பெண்கள் அரசியல் முன்னணியில்

## இளம் பெண்களை ஜனநாயக அரசியலில் ஈடுபடுவதற்கான வலுவூட்டும் பயிற்சிவழிகாட்டி


வெளியிடுவோர்

WMC
කාන්තාව සහ මාධ්‍ය සාමූහිකය
பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு
Women and Media Collective

**பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு**

**இலக்கம்:** 56/1, **சரசவி ஒழுங்கை, காசல் வீதி, கொழும்பு 8.**
**தொலைபேசி:** +94-11-2690201; **ப(f)க்ஸ்:** +94-11-2690191/2690201
**மின்னஞ்சல்ய:** wmcsrilanka@gmail.com
**இனையத் தளம:** www.womenandmedia.org
**முகநூல்:** facebook.com/womenandmediacollective
**டுவிற்றர்:** twitter.com/womenandmedia
**யூடியூப்:** Women and Media Collective

**அனுசரனை**

Norwegian Embassy
*Colombo*

அரசியல் கட்சிகளில் இளம்பெண்களின் திறமைகளை மேலும் வலுவுட்டுவதற்கான பயிற்சி வழிகாட்டி கையேடு

**“நூறு பெண்கள் அரசியல் முன்னணியில்”**

முதற் பதிப்பு : அக்டோபர் 2020

சிந்தனை, தரவு சேகரிப்பு மற்றும் ஆய்வு மாதிரி:
© பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு
ISBN 978-955-1770-38-9

**தரவு ஆய்வு மற்றும் பயிற்சி வழிகாட்டி கையேடு அமைப்பு:**

: சஞ்சீவனி ரூபசிங்க

**பக்க வடிவமைப்பு மற்றும் அட்டை வடிவமைப்பு:**

: பாலித தேனுவர

**அட்டைப் படம் :** சரித திசாநாயக

**ஒருங்கினைப்பு :** வயலா பெரேரா

**வெளியிடுவோர்** :

WMC
කාන්තාව සහ මාධ්‍ය සාමූහිකය
பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு
Women and Media Collective

பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு
இலக்கம்: 56/1, சரசவி ஒழுங்கை
காசல் வீதி, கொழும்பு 8

**அச்சிட்டோர :** சுமேத காரியவசம்,
RSK HOLDINGS அச்சகம்

# உள்ளடக்கம்

பக்க இல.

- முன்னுரை 5 - 8
- எமது நன்றிகள் 9 - 10
- மொடியூலின் மாதிரி கட்டமைப்பு 11 - 14
- 1. அறிமுகம் 15 - 28
- 2. நீங்கள் உங்களுக்கான கண்ணாடியாகுங்கள் 29 - 42
- 3. தடைகளை உடைத்தெறிவோம் 43 - 49
- 4. தலைவிகளாக வாருங்கள் 51 - 73
- 5. அனுதாபத்திற்குப் பதிலாக ஒத்துணர்வு 75 - 83
- 6. நிதியீட்டம் 85 - 94
- 7. இலங்கையின் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைப்போம் 95 - 111
- இணைப்பு 1 112 - 113
- இணைப்பு 2 113 - 114
- இணைப்பு 3 (உசாத்துணை) 115 - 116



# முன்னுரை

## நூறு பெண்கள் அரசியல் முன்னணியில்...

இலங்கை அரசியல் வரலாறு தொடர்பில் ஆய்வு செய்யும் பொழுது வரலாறு முழுவதும் அரசியலில் பெண்களின் ஈடுபாடு மிகவும் குறைவாகவே காணப்பட்டமை புலனாகின்றது. 1931 ஆம் ஆண்டில் முதல் முதலாக இலங்கையில் வாக்குரிமை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும் பெண்களின் வாக்குரிமை பாரிய போராட்டங்களுக்குப் பின்னரே நடைமுறைக்கு வந்தது. அன்றிலிருந்து இன்றுவரை சுமார் 89 வருடங்களின் பின்னரும் தேசிய, மாகாண, மாவட்ட, பிரதேச அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவமானது எந்த வகையிலும் மகிழ்ச்சி தரக்கூடியதாக இல்லை. இன்றும் எமது நாட்டில் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 5 வீதத்தினை தாண்டவில்லை. மாகாண சபைகளில் இதே பிரதிநிதித்துவம் 4 வீதம் ஆகும். 2017 ஆம் ஆண்டு வரையில் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவமானது 1.7 வீதமாகவே காணப்பட்டது. 2018 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெண்களுக்காக 25 வீதக் கோட்டா நடைமுறைப்படுத்தப் பட்டதை தொடர்ந்து அது 23 வீதம் வரையில் அதிகரிப்பதற்கான வாய்ப்புக் கிட்டியது.

தேசிய அரசியலில் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பெண்களில் பெரும்பான்மையானோர் நகர்புற மேல்வகுப்பினைச் சேர்ந்த குடும்பங்களில் இருந்தும், அரசியல் பின்புலங்களை உடையவர்களாகவும் இருந்தவர்களே அரசியலுக்குள் நுழைந்தவர்கள் என்பது முக்கியமான ஒரு விடயமாகும். மேலும் இப்பெண்கள் அரசியலுக்கு வந்த நிலைமையை கருத்தில் கொண்டால் - பொதுவாக இவர்களது குடும்பத்தினர் ஒருவரினது மரணத்திற்கு பின்னரேயாகும் உதாரணமாக: தாத்தா, தந்தை, சகோதரன் அல்லது கணவன். தன்னுடைய தலைமைத்துவ

பண்புகளின் ஊடாக சுயாதீனமாக அரசியலுக்கு வந்தவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே இருக்கின்றனர் என்பதும் தெளிவாக தெரிந்த ஒரு விடயம் ஆகும்.

இருப்பினும், சுதந்திரம் கிடைத்த காலம் முதல் 70 ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ இரண்டு தசாப்தங்கள் வரை தேசிய அரசியலுக்கு வந்த பெண்களில் அனேகமானவர்கள் தொழிற் சங்கங்களையோ பிரதேசமட்ட அரசியலில் நேரடியாக ஈடுபட்ட இடதுசாரி அரசியல் அனுபவம் உள்ளவர்கள் என்பது ஒரு வாய்ப்பான காரணமாக அமைந்தது.

இன்று ஒட்டுமொத்த அரசியல் செயல்பாடுகளுக்குள் விடேசடமாக அரசியல் கட்சிகளின் அங்கத்தவர்கள், பெண்கள் குழுக்கள், தேர்தல் செயற்பாடுகளில் மற்றும் தேர்தல் ஆர்ப்பாட்டங்களில் பிரகாசிக்கக்கூடிய அளவில் பெண்களின் பங்குபற்றுதலும், செயற்பாடுகளும் விருந்தியடைந்திருப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது. இக்கணிப்பினூடாக இளம் பெண்களின் பங்குபற்றுதல் ஒரு நேர் ரீதியில் வளர்ச்சியடைந்து இருக்கிறது என கூற முடியும். அது இன்று ”அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம்” தொடர்பில் காணக்கூடிய நல்ல விளைவாக உள்ளது. இருப்பினும், கட்சிகளின் கட்டமைப்புகளுக்குள்ளே தீர்மானம் அல்லது முடிவுகள் எடுக்கும் சந்தர்ப்பங்களில் அவர்களின் பிரதிநிதித்துவமானது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

உலகின் முதன் பெண் பிரதம மந்திரியாக 1960 இல் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையார் தெரிவு செய்யப்பட்டாலும் 1994 ஆம் ஆண்டு திருமதி சந்திரிக்கா குமாரதுங்க இலங்கையின் முதல் பெண் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டாலும் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது தொடர்பில் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் பற்றி எம்மால் திருப்தியடைய முடியவில்லை.

ஒரு நாட்டில் நடைமுறையில் இருக்கும் அரசியல் முறை வெற்றி பெற வேண்டுமாயின் பெண்களினதும், ஆண்களினதும் சம பிரதிநிதித்துவம் கட்டாயமாக இருக்க வேண்டும். அத்துடன் அப் பிரதிநிதித்துவமானது எல்லா இனக்குழுக்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டியதும் மிக முக்கியமான விடயமாகும்.

இவ்வாறான பின்னணியில் நாட்டின் தீர்மானம் எடுக்கும் அதியுயர் கட்டமைப்பான அரசியல் நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தின் முக்கியத்துவத்தை விளங்கிக்கொண்ட “பெண்களும், ஊடக கூட்டமைப்பும்” என்ற அமைப்பாகிய நாம் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான

செயற்திட்டங்களை அதிகரிப்பதற்காக கடந்த 20 வருடங்களுக்கு மேலாக பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளோம். எம்மைப் போலவே நாட்டில் இன்னும் பல பெண்கள் அமைப்புக்கள், சிவில் சமூக அமைப்புக்கள், சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சு, பாராளுமன்ற பெண்கள் கூட்டமைப்பு, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சுக்கள், தேர்தல் ஆணைக்குழு போன்ற அரச அமைச்சுகளும், அமைப்புக்களும் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு இந்த சேவைக்கு மிகப்பாரிய பங்களிப்பை வழங்கி இருக்கிறார்கள்.

16ம் இலக்க, 2017ம் ஆண்டு உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்ட (திருத்தம்) ஊடாக சட்டமாக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களில் 25 வீதம் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் கோட்டா முறையை அமுலாக்க அரசு செயற்பட்டது. இச் செயற்பாடானது நாம் அனைவரும் கொடுத்த அழுத்தத்தின் பிரதிபலனாகவே கிடைக்கப் பெற்றது. அது நாம் அனைவரும் பெற்றுக்கொண்ட மிகப் பாரியதொரு வெற்றியாகும். இதனால் 2018 இல் இடம்பெற்ற உள்ளூராட்சிமன்ற தேர்தலில் அன்றுவரை 85 பேர்களாக இருந்த பெண்களின் பிரதிநிதித்துவமானது 1926 ஆக அதிகரப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. இருப்பினும் இந்த 25வீத பிரதிநிதித்துவத்தை அமுலாக்கும் போது முறையான தெரிவுகள் இடம்பெறவில்லை. அதனால் பல்லாண்டு காலமாக அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளில் செயற்பட்ட அதிகமான பெண்களுக்கு இந்த வாய்ப்பு கிடைக்கவில்லை.

அவ்வாறு பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொண்டாலும் குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்றத்தில் அவர்களுக்கு உயர் பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் பெண்களுக்கான ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கும் வாய்ப்புக்கள் இல்லாது போயுள்ளன. இதன் விளைவாக அவர்கள் பாரிய சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. அந்தச் சவால்களை வெற்றிகொண்டு, அதனூடாகப் பெற்றுக்கொண்ட வெற்றியை நடைமுறையில் யதார்த்தமாக்குவதற்கும் வேலைத்திட்டங்களை மேற்கொண்டு உள்ளூராட்சிமன்றம், மாகாணசபை மற்றும் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்துக் கொள்வதற்குமாக செயற்பட வேண்டியது எம் அனைவரினதும் கடமையும், பொறுப்புமாகும்.

எனவே நாட்டின் நிலைத்து இருக்கக்கூடிய சமூக, பொருளாதார அபிவிருத்தி செயற்பாட்டுகளுக்கு பெண்களின் பங்களிப்பை அதிகரித்துக் கொள்வதும், அதனூடாக சமத்துவம், ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி புதியதொரு அரசியல் கலாசாரத்தைக்

கட்டியெழுப்பும் நோக்கத்துடன் நூறு பெண்களை அரசியல் செயற்பாடுகளுக்குத் தயார்படுத்துவது இந்த வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இந்நோக்கத்தை அடைந்துகொள்ள வேண்டுமாயின் நாம் எல்லோரும் கட்சி பேதமின்றி ஒன்றுசேர்ந்து கூட்டுறவாக செயற்படுவதற்கான காலம் தற்பொழுது கணிந்துள்ளது. அரசியல-ில் பெண்களின் அதிகரித்த பிரதிநிதித்துவத்தை நனவாக்குவதற்கு செயற்றிட்டங்களின் செயற்பாடுகள் மூலமே நடைமுறையாக்கலாம்.

நாட்டின் நிலையான சமூக பொருளாதார அபிவிருத்தி செயற்பாட்டை ஊக்கப்படுத்த வேண்டுமாயின் பால்நிலை அடிப்படையிலான சமத்துவத்தைக் கொண்ட அரசியல் கலாசாரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அரசியலில் ஈடுபடும் பெண்களின் அறிவினை மேம்படுத்தும் நோக்கத்தின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டு எம்மால் அரசியல-ில் ஈடுபடும் பெண்களின அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்ட ஆய்வில் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இந்த நூறு பெண்கள் அரசியல் முன்னணி என்ற கைநூலை நாம் வெளியிடுகிறோம். எமது நோக்கமானது தூ ய்மையான அரசியலுக்காக பெண்களை வலுவூட்டுவதும், அவர்களது செயற்பாடுகளை பெண்ணியம் சார்ந்த கண்ணோட்டத்தினூடாக அதனை யதார்த்தமாக்குவதுமாகும்.

**வயலா பெரேரா**
சிரேஷ்ட செயற்திட்ட உத்தியோகத்தர்
பெண்கள் மற்றும் ஊடக கூட்டமைப்பு

# எமது நன்றிகள்...

**"நூறு பெண்கள் அரசியல் முன்னணி"** என்ற இக்கைநூலை பயிற்சி கைநூலாக தயாரித்துக் கொள்வதற்கு நிதி உதவியைப் பெற்றுக்கொடுத்த நோர்வே உயர் ஸ்தானிகராலயத்திற்கு (Royal Norwgian Embassy) எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேவேளை இச் செயற்பாட்டிற்குரிய உண்மையான வழிகளை உருவாக்கித் தருவதற்காக எம்மால் செயற்படுத்தப்பட்ட செயலமர்வுகளில் பங்குபற்றி அச்செயலமர்வுகளை சிறந்த முறையில் நிறைவு செய்வதற்கு முழுமையான பங்களிப்பைப் பெற்றுத் தந்த உள்ளூராட்சி மன்றங்களின் பெண் உறுப்பினர்கள் மற்றும் கட்சிகளின் இளம் உறுப்பினர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அச்செயற்பாடுகளில் மாவட்ட மட்டங்கள் மற்றும் தேசிய மட்டங்களை ஒருங்கினைத்து திறம்படச் செயற்படுத்தி இவ் வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு மிகப்பெரிய அளவில் தமது ஒத்துழைப்பை வழங்கிய மாத்தறை, ருகுணு, சிசில அமைப்பின் தலைவி திலக்கா வீரக்கோன், குருணாகலை பெண்கள் வள மத்திய நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் சுமீக்கா பெரேரா, பதுளை பெண்கள் அபிவிருத்தி மன்றத்தின் பணிப்பாளர் சந்திரா வெத கெதர மற்றும் காலி கிராமிய பெண்கள் முன்னணியின் தலைவி சிரியாணி பத்திரகே, திருகோணமலை விழுது அமைப்பின் பிரதான செயற்திட்ட உத்தியோகத்தர் இந்துமதி ஹரிகர தாமோதரன் மற்றும் ஏனைய சகோதரிகளின் அர்ப்பணிப்பை இங்கு நாம் மதிப்புடன் நினைவு கூருகின்றோம்.

அத்துடன் மஹரகம மாநகரசபையின் சந்திரிக்கா த சொயிசா, கோட்டை மாநகர சபையின் பிரியதர்ஷனி அரியரத்ன, ஹர்சனி சமந்திக்கா போன்ற மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் செயற்பாட்டு உறுப்பினர்களான நிலூஷி பெரேரா போன்றவர்கள்

இச்செயற்திட்டம் வெற்றிகரமாகச் செயற்படுவதற்கு பல்வேறு வகையில் பெற்றுத்தந்த உதவிகள், ஒத்துழைப்புகளை சகோதரத்துவத்துடன் நினைவுகூருகின்றோம்.

எல்லா செயலமர்வுகளையும் மிகச் சிறந்த முறையில் வினைத்திறன் கூடியதாக செயற்படுத்துவதற்கு பாரியளவில் சிரமம் எடுத்து அர்ப்பணிப்புடன் வழிகாட்டி வளப் பங்களிப்பைப் பெற்றுத்தந்த வளவாளரான சுமித்தா பெரேரா சகோதரியை அன்புடன் நினைவு கூருகின்றோம். பயிற்சி செயலமர்வுகளை செயற்படுத்தி அறிக்கைப்படுத்தி அதன் பின்னர் எழுந்த அனைத்துச் செயற்பாடுகளையும் சிறந்த முறையில் நிறைவு செய்து கொள்வதற்கு பாரிய பங்களிப்பைப் பெற்றுத்தந்த துஷாரி மடஹப்பொல மற்றும் செயலமர்வை அறிக்கைப்படுத்தி பயிற்சி கைநூலை சரிபிழை பார்த்து சிறந்த ஒத்துழைப்பைப் பெற்றுத்தந்த எடினா மல்காந்தி சகோதரிக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேற்குறிப்பிட்ட செயலமர்வுகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளை வகைப்படுத்தி ஆய்வுகளின் பெறுபேறுகளை ஒருங்கிணைத்து இக்கைநூலைத் தயாரித்த களனி பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் சஞ்ஜீவனி ரூபசிங்க சகோதரிக்கும் எங்களது மதிப்புடன் கூடிய சகோதரத்துவமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அட்டைப்பட வடிவமைப்பில் உதவிய சகோதரர் சரித்த திசாநாயக்க மற்றும் கைநூலின் பக்க வடிவமைப்பை தயாரித்த பாலித்த தேநுவர சகோதரருக்கும் அவர் பெற்றுத்தந்த ஒத்துழைப்பிற்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

சிங்கள மொழியில் தயாரித்த இக்கைநூலை தமிழ்மொழியில் மொழிபெயர்த்ததுமன்றி எம்முடன் சிறந்த தொடர்புகளை கட்டியெழுப்புவதற்கு மேற்கொண்ட பணிகளுக்காக வீரசிங்கம் சகோதரருக்கும் எமது சகோதரத்துவமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இக்கைநூலை அச்சுப்பதிப்பு செய்துதந்த R.S.K.Holdings அச்சகத்தின் சுமேத காரியவசம் சகோதரர் உட்பட அனைத்து அலுவலர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு கிடைத்து இருக்காதுவிடின், இந்த நூறு பெண்கள் அரசியல் முன்னணி என்ற கைநூலை வெளிக்கொணர்ந்திருக்க முடியுமா? ஆகவே நீங்கள் இல்லாமல் இது நனவாகி இருக்காது. எப்பொழுதும் நீங்கள் அனைவரும் எமக்கு மிகப்பெரிய பக்கபலமாக இருந்தமையை இங்கு உளப்பூர்வமாகக் குறிப்பிட்டுக்கொள்கிறோம்.

**பெண்கள் மற்றும் ஊடக கூட்டமைப்பு.**